Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 222
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 5 ஜ. ஆ. 16 வியாழக்கிழமை [21-9-67]

## யாழ். மாநகர. சபை தேர்தல்: காங்கிரஸ் - மாஜிமேயர் கோஷ்டி போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம்?

யாழ்ப்பாணம், வியா யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸுடன் துரையப்பா முன்னணிக் கோஷ்டியினர் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்த முற்பட்டுள்ளார்கள் என்று தெரியவருகிறது.

தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்களான முன்னாள் அங்கத்தவர்கள் சிலரும் இம் முயற்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகவும், இது சம்பந்தமாக நேற்று சில முன்னாள் அங்கத்தவர்களிடையே ஆரம்ப பேச்சுவார்த்தை நடந்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

தற்பொழுதுள்ள 17 வட்டாரங்களில் 10 வட்டாரங்களைத் தமிழ்க் காங்கிரஸுக்கு ஒதுக்குவதென்றும், 7 வட்டாரங்களைத் துரையப்பா முன்னணிக் கோஷ்டிக்கு ஒதுக்குவதென்றும் நேற்றைய பேச்சுவார்த்தையின்போது ஆலோசனை தெரிவிக்கப்பட்டதாம்.

[6-ம் பக்கம் பார்க்க]

# ஹொரகொல்லையில் சிறிமா-இந்திரா சந்தித்துப் பேசினர்

## பண்டாரநாயகா சமாதியில் இந்திய பிரதமர் மலர்வளையம் வைத்தார்

கொழும்பு, புதன்

இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி இன்று காலை ஹொரகொல்லைக்குச் சென்று காலஞ்சென்ற இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவின் சமாதியில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

இதன்பின் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவுடன் சிறிது நேரம் திருமதி இந்திரா பேச்சுவார்த்தை நடத்தினர்.

இன்று காலை 7 மணிக்கு திருமதி இந்திராவும் அவரது கோஷ்டியினரும் அலரி மாளிகையிலிருந்து மோட்டார் காரில் கண்டிக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் சென்ற வழிநெடுகிலும் மக்கள் கூடிநின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

ஹொரகொல்லையில் பண்டாரநாயகாவின் சமாதிக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலிசெலுத்தியபின் திருமதி பண்டாரநாயகாவுடன்சிறிது நேரம் சம்பாஷித்துவிட்டு திருமதி இந்திரா காந்தி தமது கண்டிப்பயணத்தைத் தொடர்ந்தார்.

கண்டியை திருமதி காந்தி கோஷ்டியினர் அடைந்ததும் அங்கு அவரை எதிர் பார்த்துக் காத்து நின்ற ஆயிரக்கணக்கான மக்கள் கரகோஷம் செய்தும் 'ஜே' கோஷம் முழங்கியும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

போரதனைப் பாலத்துக்கு திருமதி இந்திரா காந்தி பிரயாணம் செய்த கார் வந்துசேர்ந்ததும் பதில் நிதி மந்திரியும் செங்கடகல எம். பி.யுமான திரு. விமல சேனு, திருமதி விமலசேனு, கண்டி நகரசபை மேயர், கண்டி மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பலரும் திருமதி இந்திராவை வரவேற்றனர்.

வவனியா

## ஆசிரியர் இடமாற்றத்தினல் மாணவர் பாதிப்பு

வவனியா, புதன்

வவனியா மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளில் ஆசிரியர் இடமாற்றத்தினல் காலியான ஸ்தானங்களுக்கு ஆசிரியர்கள் இன்னும் நிரப்பப்படாமலிருப்பதால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக வவனியா எம். பி. திரு. ரி.சிவசிதம்பரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வெற்றிடங்களாகவுள்ள இடங்களுக்கு ஆசிரியர்களை நிரப்பும்படி கேட்டுக்கொண்டும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லையாம்.

பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் நிரப்பப்படாததால், பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பெற்றோர்கள் இதனல் பெரிதும் அதிருப்திக்குள்ளாகியுள்ளனர்.

இந்த வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களை உடன் நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கும்படி கேட்டு கல்வி மந்திரிக்கு இப்போது வவனியா எம். பி திரு. சிவசிதம்பரம் கடிதமொன்று அனுப்பியுள்ளார்.

## 'கடற்றெழில் அபிவிருத்தியிலும் அக்கறை காட்டவேண்டும்'

### அரசாங்கத்திடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

'நாட்டின் உணவுத் தேவையை நிவிர்த்திசெய்யக்கூடிய விளைபொருட்களை பெருக்குவதில் அதிக கவனம் செலுத்தும் அரசாங்கம் கடற்றெழில் அபிவிருத்தியிலும் அக்கறை காட்டவேண்டும். இலங்கைக் கடலிலே கிடைக்கின்ற கடலட்டை, சங்கு போன்ற பொருட்களை வெளிநாடுகள் வாங்குவதற்குக் காத்திருக்கின்றன. இத்தொழில்களின் பொருட்களால் அந்நிய செலாவணி கிடைக்கின்றது. அரசாங்கம் இதற்கான ஆக்கபூர்வமான திட்டங்களை செய்யுமாளுல் இலங்கையின் பொருளாதாரம் பெருகுவதற்கு வழி கிடைக்கும்,'

இவ்வாறு கடந்த திங்கட்கிழமை வடமாகாண கடற்றெழில் சங்க மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய கூட்டுறவு மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு. ஆர். இராசரத்தினம் குறிப்பிட்டார்,

இக்கூட்டத்திற்கு திரு. எஸ். ஸ்ரனிஸ்லஸ் தலைமை வகித்தார். சிரேஷ்ட கூட்டுறவு உதவியாணையாளர் திரு. கே. எஸ். பொன்னுத்துரை, வடபகுதி கூட்டுறவு ஆணையாளரும், மன்னர் கூட்டுறவு ஆணையாளரும் சமூகமளித்திருந்தனர். [நி]

'கடலட்டை வாணிபத்தினல்

## தொழிலாளர் அதிக வருமானம் பெறுகின்றனர்'

யாழ்ப்பாணம், வியா.

''வடமாகாணம் கடற்தொழிலாளர்களின் சமாசக் கூட்டுறவுச்சங்கங்களின் ஆதரவில் கடல் அட்டைகளை வெளிநாடுகளுக்குஏற்றுமதி செய்வதால் பல தொழிலாளர்களும் அதிக வருவாய் பெற்று வருகின்றார்களென்பதை யாருமே மறுக்கமுடியாது. சுமார் 24 வீதமும், 13 வீதமும், 10 வீதமும் தொழிலாளர்கள் வருவாய் பெறுகிறார்கள். இந்த வேளையில் டாக்டர் நாகநாதன் தொழிலாளர்கள் கடல் அட்டைகளை ஏற்றுமதிசெய்வதால் 3 வீதம்தான் நயமடைகிறார்கள்எனப் பேசியது கவலைக்குரியதாகும்.''

மேற்கண்டவாறு நேற்று

[2-ம் பக்கம் பார்க்க]

கரம்பன்

## கொலை முயற்சி வழக்கில் 4 எதிரிகளும் விடுதலை

யாழ்ப்பாணம், வியாழன்

கரம்பன் கொலை முயற்சி வழக்கில் 2-ம் எதிரியும், 4-ம் எதிரியும் விடுதலை செய்யப்பட்டனர். 1-ம் எதிரி 500 ரூபா பிணையில் 3 வருட நன்னடத்தை பிணையிலும், 3-ம் எதிரி 500 ரூபா பிணையில் 2 வருட நன்னடத்தை பிணையிலும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. விசாரணை நாவில், 1-ம் எதிரி தற்பாதுகாப்பிற்காக படுகாயம் விளைவித்தக் குற்றத்தை ஒப்புக் கொண்டார். 2-ம், 3-ம், 4-ம் எதிரிகள் காயம் விளைவித்த குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து நீதியரசர் மேற்கண்ட[illegible] தீர்ப்பளித்தார்.

இவ்வழ[illegible] ஆண்டு செப்டம்பர் 22-ந் திகதி கரம்பனில் வி. மரியநாயகம், ஏ. சின்னராசா, எஸ். இராயப்பு, ஏ. தோமஸ் ஆகியோர் மரியான் யோசப்புவை கொலை செய்ய யற்சித்ததாகவும், அதே நேரத்தில் அதே இடத்தில் இன்ஞசி இராசநாயம், மரியான் சின்னத்துரை, அன்ரனி சீமான் பிள்ளை, இன்ஞசி சிறில் ஆகியோரை தாக்கிக் காயம் விளைவித்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

1-ம், 2-ம் எதிரிகள் சார்பில் அட்வக்கேட் கே. வி. எஸ். சண்முகநாதனும், 3-ம், 4-ம் எதிரிகள் சார்பில் அட்வக்கேட் டபிள்யு. அரசுவால்டனும், புறக்டர் ஆர். விஸ்வநாதன். புறக்டர் ஏ. ரி. ஜி. பிரிட்டோ ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்கள். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் [illegible] நியமிக்கப்பட்டிருந்தார்.



இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி இரத்மலானை விமானநிலையத்தை வந்தடைந்ததும் பிரதமர் டட்லி சேனநாயக்கா அவரை வரவேற்கிறார். திருமதி இந்திராகாந்தியும் பதிலுக்கு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சமாதானமாக வாழ்வது என்று இரு சகோதரர்கள் முடிவுசெய்துவிட்டால், அங்கே மூன்ருவது ஆள் அவர்களுக்கிடையில் நின்று அவர்களைப் பிரித்துவைக்க முடியாது என்பது எனது கருத்து.

— மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க(ஹு புரட்டாதி மீ 5உ 21-9-67)


## யுதாண்ட் கருத்து

ஐ. நா. மகாசபையின் இருபத்திரண்டாவது கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் ஆரம்பமானபோது. ஐ. நா தலைமைக் காரியதரிசி யுதாண்ட் முக்கிய விஷயங்கள் பற்றிச் சமர்ப்பித்துள்ள அறிக்கை, ஐ. நா. அங்கத்துவ நாடுகள் அனைத்தின் தீவிர சிந்தனைக்கும் ஒருதீர்க்கமான முடிவுக்கும் வழிவகுக்க உதவவேண்டும்.

ஐ. நா. மகாசபையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகும் ஒவ்வொரு தடவையும் உலகநிலைமை பற்றியும் ஐ. நா. ஆற்றிய, அடுத்துச் செய்யவேண்டிய பணிகள் பற்றியும் தலைமைக் காரியதரிசி அறிக்கை சமர்ப்பித்துப் பேசுவது வழக்கம். இது வெறும் சம்பிரதாய முறையாகமட்டும்இருந்துவிடாது தலைமைக்காரியதரிசியின் அறிக்கை ஐ. நா. வின் செயல்திட்டங்களில் ஒன்ருகக் கருதப்பட்டு, ஐ. நா. தனது குறை நிறைகளை உணர்ந்து, தனது பணியைச்செய்வதற்குப்பயன் படவேண்டும்.

மேற்கு ஆசிய நிலைமை பற்றி தலைமைக் காரியதரிசி யுதாண்ட் தமது அறிக்கையில் குறிப்பிடுகையில், மேற்கு ஆசியப் பிரச்னையின் அடிப்படைக் காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றை நீக்குவதற்குத் தீவிரமுயற்சி செய்ய ஐ. நா. மீண்டும் தவறிஞல், குறைந்தது இன்னும் சில வருடங்களில் மீண்டும் மேற்கு ஆசியாவில் யுத்தம் தோன்றும் என்று கூறுகிருர் மேற்கு ஆசியாவில்இப்போதுள்ள போர்ஒய்வுநிலை, மற்ருெரு யுத்தத்துக்கு தயார் செய்வதற்கான ஓர் இடைக்கால யுத்த நிறுத்தமாகவே தோன்றுகிறதென நாம் இதற்குமுன் இதே பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். யுதாண்டும் இதே கருத்தைத்தான் தெரிவித்திருக்கிருர். மேற்கு ஆசியாவில் சமரச முயற்சிசெய்வதற்கு உடனடியாக ஒரு சமாதானத் தூதரை அங்கு அனுப்புவதற்கு மகாசபையின் அனுமதியை யுதாண்ட் கோரியிருக்கிருர்.

மேற்கு ஆசியாவிலும் சரி வேறெங்காகிலும் சரி தகராறுகள் உள்ள இடங்களில் மோதல் ஏற்படாமலோ, ஏற்பட்ட மோதலைத் தடுத்து நிறுத்தவோ ஐ. நா. உடனடி நடவடிக்கை எடுப்பதுடன் அதன்பணி முடிந்துவிட்டதாகாது. ஆனல் இதுவரை ஐ. நா. எடுத்த நடவடிக்கைகள் இப்படித்தான் கருதச்செய்கின்றன. தகராறுகள் தோன்றுவதற்கு அடிப்படைக்காரணம் என்ன என்பதை ஆராய்ந்து அவற்றை சமரசப்பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துவைக்க பலவேறு நாடுகளையும் சேர்ந்த ஆற்றலும் அரசியல் ஞானமும்உள்ளவர்களைக் கொண்ட சமாதானக் குழுக்களை நியமித்து அவற்றைச் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அனுப்பலாம். இது ஐ. நா. வின் சமாதானப் பணிக்கு பெருமளமளவில் உதவிபுரியுமென எதிர்பார்க்கலாம்.

ஐ. நா. மீது மீண்டும் நம்பிக்கையைஏற்படுத்தவும் உலகப் பிரச்னைகள் பலவற்றைச் சமாளிக்கவும் வெளிவிவகார அமைச்சர்களின் மட்டத்தில் பாதுகாப்புச் சபைக்கூட்டங்கள் பல கூடவேண்டுமென்றும் யுதாண்ட் தெரிவித்திருக்கிருர். சர்வதேச நிலைமை முன்னையவிட இன்று மோசமான நிலையை அடைந்துள்ளபோதிலும், உலக சமாதானத்துக்கு ஐ. நா. தொடர்ந்துபணி செய்யமுடியுமென்ற நம்பிக்கையை யுதாண்ட் இழக்கவில்லை. ஐ. நா. வெறும் விவாத அரங்காகிவிட்டதென்று கருதும் திரு. மேனன் போன்றவர்களும் கூட ஐ. நா. இல்லையெனில் இன்றைய உலகம் என்ன நிலையிலிருக்கும் என நினைத்துப் பார்க்கவே முடியாதென்று கூறத்தவறவில்லை.

யுதாண்ட் தமது கடமையைச் சரிவரச் செய்ய முயன்றுவருகிருர். வல்லரசுகளும் ஐ. நா. அங்கத்துவநாடுகளும் ஒன்று சேர்ந்து அவருக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பதில்தான் ஐ நா. வின் வெற்றியும் உலக சமாதானமும் தங்கியிருக்கின்றன.

எம். ஜி. ஆர். — எம். ஆர். ராதா வழக்கு

# "எல்லாக் குண்டுகளும் ராதாவின் றிவால்வரிலிருந்து வெடித்தவை"

## சென்னை மாவட்ட துப்பாக்கி நிபுணர்சாட்சியம்

சென்னை, செப். 20

எல்லாக் குண்டுகளும் ராதாவின் றிவால்வரிலிருந்து வெடித்தவையென்று எம். ஜி. ஆர். - ராதா துப்பாக்கிச் சூட்டு வழக்கில் நேற்று சாட்சியமளித்த சென்னை மாவட்ட துப்பாக்கி நிபுணர் திரு. ஏ. வி. சுப்பிரமணியம் கூறினர்.

சினிமா நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனைச் சுட்டுக்கொலை செய்ய முயன்றதாகவும். தன்னைத் தானே சுட்டுக்கொலைசெய்ய முயன்றதாகவும் மற்ருெரு சினிமா நடிகரான எம். ஆர். ராதா மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று சென்னை செஷன்ஸ் கோர்ட்டில் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டது. சென்னைமாவட்ட துப்பாக்கி நிபுணர் திரு. ஏ. வி. சுப்பிரமணியம் விசாரிக்கப்பட்டார்.

அவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது.

"ராதாவின் றிவால்வர், எம். ஜி. ஆரின் றிவால்வர், ராதாவின் றிவால்வரிலிருந்த தோட்டாக்கள் மாஜிஸ்திரேட் மூலமாகப் பொலிஸாரால் எனக்குப் பரிசோதனை அறிக்கைக்காக அனுப்பப்பட்டது. எம். ஜி. ஆரின் உடம்பிலிருந்து எடுக்கப்பட்ட குண்டும் எனக்கு அனுப்பப்பட்டது. ராதாவின் றிவால்வரிலிருந்து உபயோகிக்கப்படாமல் இருந்த தோட்டாவும், எம். ஜி. ஆரிலிருந்து எடுக்கப்பட்ட தோட்டாவும் ஒரே தன்மையுடையன. ராதாவின் றிவால்வரிலிருந்த உபயோகிக்கப்படாத தோட்டாவும், எம். ஜி. ஆர். றிவால்வர் தோட்டாவும் ஒவ்வொன்றுடன் ஒத்துப்போகாத தன்மையுடையன றிவால்வரிலுள்ள தோட்டா அறைகளைப் பரிசோதனை செய்தபோது எம். ஜி. ஆர். -ராதா இருவரின் றிவால்வரிலுள்ள 'ஸ்றிப்கர்பின்' வேறுபட்டிருந்தது. ஆகையால் சம்பந்தப்பட்ட தோட்டாக்கள் ராதாவின் றிவால்வரிலிருந்து சுடப்பட்டது என்ற முடிவுக்கு வந்தேன்."

துப்பாக்கி நிபுணர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் எம் ஜி. ஆர். - ராதா இருவரின் றிவால்வர்களும் ஒரே தயாரிப்பென்றும், ஒரே அளவானதென்றும், எம். ஜி. ஆர். றிவால்வர் போன்றே ராதாவின் றிவால்வரிலும் ஆறு அறைகளுண்டென்றும் கூறினர். ராதாவின் றிவால்வர் எனக்கு அனுப்பப்பட்டபோது அதில் மூன்று உபயோகிக்கப்படாத தோட்டாக்கள் இருந்தன என்றும் கூறினர்.

# இலங்கை தேயிலை சபையின் நடமாடும் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், வியா.

இலங்கை தேயிலை பிரசார சபைச் சங்கத்தினர் தமது நூற்ருண்டு விழாவைக் கொண்டாடும்வண்ணம் நடமாடும் பொருட்காட்சிக் குழுவினரை இலங்கையின் பல பாகத்திற்கும் அனுப்பியுள்ளனர். அக்குழுவினர் யாழ்ப்பாணம் பூங்காவின் தென்புறத்தில் கடந்த நான்கு தினங்களாக முகாமிட்டிருந்தனர்.

இலங்கையில் தேயிலையை உற்பத்திசெய்த முதல்வரான திரு. ஜேம்ஸ் டெய்லரின் சிற்பங்களும், அவரது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் படங்களும் இப்பொருட்காட்சியில் முக்கியமாக இடம்பெற்றிருந்தன.

மாலை நேரத்தில் வர்ண மின்சார வெளிச்சங்கள் மத்தியில் கவர்ச்சியுடன் விளங்கிய இக் காட்சியை பல பாடசாலை மாணவர்களும் மற்றும் பொதுமக்களும் கண்டுகளித்தனர்.

யாழ்ப்பாணப் பகுதியினர் பலருக்குத் தெரியாததான தேயிலைச்செடிகளைக் காட்சிக்கு வைத்திருந்தது பலரையும் கவரக்கூடியதாகவிருந்தது. இந்தக் குழுவினர் தற்போது அனுராதபுரத்திற்குச் சென்றுள்ளனர். (நி)

## மறைமலையார் நினைவு விழா

கொழும்பு, புதன்

மறைமலை அடிகளார் நினைவு விழா இம்மாதம் 26-ம் தேதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

## ஒய்வுபெறும் தலைமைஆசிரியர்

யாழ்ப்பாணம், வியாழ

வதிரி வடக்கு, அல்வாய் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கடந்த 39 வருடங்களாகத் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. க. மாணிக்கம், இன்று 21ம் திகதியுடன் ஒய்வு பெறுகிருர்.

உதவி ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் பெற்ருரினதும் நன்மதிப்பைப் பெற்றுள்ள இவர் தமது சேவைக்காலத்தில் பிரஸ்தாப பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவராவார்.

## தொழிலாளர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

முன்தினம்நடைபெற்ற வடமாகாணக்கடற்தொழிலாளர் சமாஜத்தின் கூட்டத்தில் அதன்தலைவர்திரு. ஸ்ரானிஸ்லோஸ் பேசுகையில் தெரிவித்தார். இக்கூட்டத்துக்கு உடுவில் எம். பி, திரு. வி. தர்மலிங்கம் விசேஷமாகக் கலந்துகொண்டார்.

"அரைலட்சம் ரூபாவரையிலிருந்த அந்நிய செலவாணியை இத்தொழிலாளர்கள் நான்கு லட்சம் ரூபாவாக உயர்த்தியுள்ளதே இத் தொழிலாளர்கள் அதிக அட்டை வருமானத்தைக் கடல்ஏற்றுமதியால் பெறுகின்ருர்கள்என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்" என திரு. ஸ்ரானிஸ்லேஸ் சொன்னர்.

திரு. பொன்னம்பலம் நன்றி தெரிவித்துப் பேசினர். (நி)

## இன்றைய பலன்

21-9-67
வியாழக்கிழமை
(புரட்டாதி மாதம் 5உ)

நட்சத்திரம்- ரேவதி காலை 7-14 வரை மேல் அச்சுவினி

திதி- பிரதமை இரவு 4-12 வரை

சுபநேரம்- 7-33-9-03

ராகுகாலம்-1-33-3-03

மேஷம்- மனக்குமைச்சல், சோர்வு மிகுதி.

ரிஷபம்-அமைதிகிடைக்கும், ஆதரவுண்டு.

மிதுனம்- தூண்டுதல் இருப்பின் துரிதமுன்னேற்றம்.

கடகம்- இல்லறம் இனிக்கும், இனியவை நடக்கும்.

சிம்மம்- பொருள்வரவு பொதுசன மதிப்பு.

கன்னி- பகையுண்டு பாதையில் பார்த்துப் போ.

துலாம்- சுற்றம் வாழ்த்தும், சுகமுமுண்டு.

விருச்சிகம்- தொழில் கவலை, தொல்லைகள் தாக்கும்.

தனுசு-இறைவழி நாட்டம், இன்சொல் கேட்டல்.

மகரம்- பதட்டம் அதிகம், அடக்கம்வேண்டும்.

கும்பம்- குடும்பநலன், குறைவு நீங்கும்.

மீனம்- தடுமாறும் மனம் தடையுமுண்டு.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## நாடும் நடப்பும்

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இலங்கையில் வந்திறங்கியது தொடக்கம் அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் இலங்கைப் பத்திரிகைகள் போட்டி போட்டுக்கொண்டு பெரிய பெரிய அளவில் விதவிதமான முறையில் படங்களைப் பிரசுரிக்கின்றன. இலங்கையின் தகவல் இலாகாகூடச் சுறுசுறுப்பாக இயங்குகிறது. புதிய புதிய கோணத்தில் படம் பிடித்து பத்திரிகைப் புகைப்படப்பிடிப்பாளர்கள் தமது திறமையைக் காட்டுகின்றனர். அவர்களுக்கு சபாஷ் போடலாம்.

இந்திராகாந்தியுடன் டட்லி பேசும் ஒரு கட்டம். இதுவும் பத்திரிகைகளில் படமாக வெளியிடப்பட்டுள்ளது. திரு. டட்லி தமது வாயில் சுங்கான் [பைப்] வைத்தபடி திருமதி இந்திராவுடன். பேசுகிருர். இந்திராவின் பார்வை வேறு எங்கோ இருக்கிறது. படம் நன்ருகத்தானிருக்கிறது. ஆனல் ஒரு பெண்ணின் அருகில் ஒரு பிரதமர் சுங்கானை வாயில் வைத்தபடி இருப்பதைப் பார்க்க ஏதோ ஒரு மாதிரியாகத் தானிருக்கிறது!

இந்திராவின் தந்தை, காலஞ் சென்ற இந்தியப் பிரதமர் ஸ்ரீ நேரு கடுமையாகச் சிகரட் பிடிக்கும் பழக்கமுடையவர். தொடர்ச்சியாக சிகரட்டை ஊதித்தள்ளுவாராம். ஆனல் அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளைப் புகைப்படம் பிடித்தவர்கள் அவர் கையில் அல்லது வாயில் சிகரட் வைத்திருப்பதுபோன்று படம் பிடித்து பத்திரிகைகளில் வெளியிட்டது அருமையிலும் அருமை.

ஃ ஃ ஃ

பிரதமர் டட்லியுடன் திருமதி இந்திரா நடத்திய முதல் சுற்றுப் பேச்சில் தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிக்கு வந்திருப்பதைக்கண்டு இங்கு எவரும் அச்சமடைய வேண்டியதில்லையென்றும் இலங்கையுடன் நட்புறவுடன் வாழ்வதென்ற கொள்கைக்கு மாருக இந்தியாவின் ஒரு ராஜ்யம் நடந்துகொள்ளுமென்று நினைப்பது அர்த்தமற்றதென்றும் இந்தியப் பிரதமர் தெரிவித்தாராம்.

தி. மு. கழக ஆட்சியைக் கண்டு இலங்கையிலுள்ள எவரும் பயப்படத்தேவையில்லையென்று தி. மு. க. தலைவரும் தமிழ் நாட்டு முதல் அமைச்சருமான திரு. சி. என். அண்ணுதுரை இதற்கு முன்னர் அறிவித்திருந்தார். ஆனலும் என்ன? இங்கு தி. மு க. பூச்சாண்டி காட்டி அரசியல்லாபம்பெறலாமென நினைப்போர் யார் என்ன சொன்னலும் கேட்கவா போகிருர்கள்.

என்ருலும் நேற்று ஹொரகொல்லையில் திருமதி சிறிமா பண்டாரநாயகாவைச் சந்தித்த இந்தியப் பிரதமர், 'தி. மு. க. ஒரு பூதமல்ல, அது உங்களை விழுங்க வராது' என்று உறுதி கூறியிருந்தாராஞல் நல்லது. இங்கு தி. மு. க. பூச்சாண்டி காட்டுவதில் திருமதி பண்டாரநாயகாவுக்கும் பங்குண்டு என்பதை இந்திரா அறிந்திருக்கக்கூடும்.

சிற்றரசு அல்ல அண்ணுதுரையே வந்து சொன்னலும் தி. மு. க. பற்றிய தனது கொள்கை மாருது என்று சொன்னவர் திருமதி சிறிமாதான். ஒரு வேளை இந்திரா சொன்னல் தமது கொள்கையை மாற்றிக் கொள்கிருரோ என்னவோ.

ஊதுகிற சங்கை ஊதினல் விடிகிற நேரம் விடியட்டுமே. —ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு ஆசியா, வியட்னும் பிரச்னைகளினல் ஐ. நா. விலுள்ள நம்பிக்கை குறைகிறது

## ஐ. நா. சபையின் 22-வது கூட்டத்தொடரில் பொதுக் காரியதரிசி யூ. தாண்ட் அறிக்கை

### மேற்கு ஆசியாவில் மீண்டும் போர் ஏற்படும் ஆபத்து பற்றி எச்சரிக்கிறுர்

நியூயோர்க், செப். 20

ஐ. நா. பொதுச்சபையின் 22-வது கூட்டத் தொடர் நேற்று நியூயோர்க்கில் ஆரம்பமாகியது. ஐ. நா. பொதுக்காரியதரிசி யூ தாண்ட், தமது வருடாந்த அறிக்கையைக் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

மேற்கு ஆசிய நிலையும், வியட்னும் போரும் ஐ. நா. சபை மீதான உலக நாடுகளின் நம்பிக்கையில் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளதாக அவர் எச்சரிக்கை செய்தார்.

மேற்கு ஆசிய, வியட்னும் பிரச்னைகளைத் தீர்க்காமல் விட்டதில் ஐ. நா. வுக்கும் பொறுப்புண்டு என்றுர் அவர். ஐ. நா. வின் சமாதான தீர்மானங்களுக்கு வல்லரசுகள் போதிய ஒத்துழைப்பு அளிக்காததே அதற்குக் காரணம் என அவர் விளக்கினுர்.

மேற்குஆசியாவில், ஐ. நா. உறுதியான சமாதான முயற்சி எடுக்காவிடில், அங்கு ஒருசில வருடங்களில் மீண்டும் போர் ஏற்படலாம் என யூதாண்ட் அச்சம் தெரிவித்தார்.

**ஒப்புக்கொள்ள முடியாது**

மேற்கு ஆசியாவில் ஆக்கிரமிப்பு மூலம் இஸ்ரேல் பெற்றுள்ள பிரதேசலாபங்களை நாம் ஒப்புக்கொள்ள முடியாதென அவர் தெரிவித்தார்.

பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களின் நலன் கருதி, வேற்றுமைகளைக் கைவிடும்படி யூதாண்ட் இஸ்ரேல், அரபு நாடுகளைக் கேட்டுக்கொண்டார்.

மேற்கு ஆசியாவுக்கு ஐ. நா.வின் விசேஷ பிரதிநிதி ஒருவரை அனுப்புவதற்குச் சபையின் உடனடியான அங்கீகாரத்தை யூதாண்ட கோரினுர்.

வியட்னும் போர் பற்றி அவர் குறிப்பிடுகையில், அங்கு நடைபெறும் போர் பயங்கரமான வளர்ச்சி அடைந்து வருவதாகவும், பிரமிக்கத்தக்க அளவில் ஆட்சேதம் இடம்பெறுவதாகவும் வருத்தம் தெரிவித்தார்.

வியட்னும் சமாதானத்துக்கு வழிவகுக்கும் சில முன் நடவடிக்கைகளை ஐ. நா. எடுக்கலாம் என அவர் ஆலோசனை தெரிவித்தார்.



**வெளியுறவு மந்திரிகள் கூட்டம்**

மேற்கு ஆசியா, வியட்னும் மற்றும் நெருக்கடி நிறைந்த சர்வதேசப் பிரச்னைகளைத் தீர்க்குமுகமாக, வெளியுறவு மந்திரிகள் கட்டத்தில் பங்கு தோபஸ்து சபைக் கூட்டங்களை நடத்தலாம் எனவும் யூதாண்ட் ஆலோசனை கூறினுர். அத்துடன் சர்வதேச நீதி மன்றத்தை அதிக அளவில் பயன்படுத்த வேண்டுமெனவும், அதன் சட்டாய தீர்ப்புக்களை அங்கத்துவ நாடுகள் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டுமெனவும் அவர் மேலும் யோசனை கூறினுர்.

**ரொடீஷியா**

ரொடீஷியா பற்றி யூதாண்ட் குறிப்பிடுகையில், அங்குள்ள சட்டவிரோதமான அரசாங்கம், ஐ. நா.வின் தீர்மானங்களை அத்துமீறி நடப்பதாகவும், இதற்கு தென் ஆபிரிக்காவும், போர்ச்சுகலும் உதவியளிப்பதாகவும் கூறினுர்.

ஐ. நா.விலுள்ள சின்ன நாடுகளின் அங்கத்துவத்துக்குச் சபை ஒரு கட்டுப்பாடு விதித்தால் நல்லது என்று யூதாண்ட் தமது அறிக்கையில் கருத்துவெளியிட்டுள்ளார். மிகச் சிறிய நாடுகளுக்கு அளிக்கப்படும் அங்கத்துவம், அவை தமது சக்திக்கு மீறிய பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்ற முடியாதுசெய்து விடுவதாக அவர் தெரிவித்தார். சிறிய நாடுகளுக்கென ஒரு சங்கத்தை உருவாக்குவதில் சபை முனையலாம் என அவர் ஆலோசனை வெளியிட்டார்.

**ருமேனியர் தலைவரானுர்**

ஐ. நா. பொதுச்சபையின் 22-வது கூட்டத் தொடருக்கு, ருமேனிய வெளியுறவுமந்திரி திரு. மலாஸ்கே தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். தலைவர் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்ட [illegible] ஐரோப்பியப் பிரதிநிதியும், கம்யூனிஸ்டும் இவரேயாவார். அவருக்கு 112 வாக்குகள் கிடைத்தன.

தமது தலைமையுரையில், மேற்கு ஆசியா, வியட்னும் பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு அங்கத்துவ நாடுகளின் ஒத்துழைப்பை திரு. மலாஸ்கே கோரினுர்.

பின்னர் பத்திரிகையாநாடொன்றில் பேசுகையில், வியட்னும் போரில் ஐ. நா. நடவடிக்கை மட்டும் சமாதானத்தை ஏற்படுத்துமென தாம் நம்பவில்லையென அவர் கூறினுர். போரில் சம்பந்தப்பட்ட ஒரு நாடாகிய வடக்கு வியட்னும், ஐ நா.வில் அங்கத்துவ நாடாக இல்லாததால் ஐ. நா.வின் தீர்ப்புகளுக்கு அதைக் கட்டுப்படுத்த முடியாது என அவர் தெரிவித்தார். ஆனுலும் 1954ம், 1962ம் ஆண்டைய ஜெனீவா ஒப்பந்தங்களின் பிரகாரம் வியட்னும் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண முயற்சிக்கலாம் என அவர் கூறினுர்.

ஐ. நா. பொதுச்சபையின் பிரதான அரசியல் கமிட்டியின் தலைவராக ஐக்கிய அரபுக் குடியரசைச் சேர்ந்த திரு. இஸ்மொழ தெரிவுசெய்யப்பட்டார்.

**கியூபா விலகியது**

ஐ. நா. சபையின் 22வது கூட்டத் தொடரிலிருந்து கியூபா வாபஸ்பெற்றுக் கொண்டுள்ளது. தமது தூதுகோஷ்டி பஹாமாஸில் அமெரிக்க அரசாங்கத்தினுல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக அது புகார்செய்தது.

இந்தப் புகாரை மறுத்த அமெரிக்கப் பிரதிநிதி, தூதுகோஷ்டி கொண்டுவந்த சாமான்களில் சில மரப்பெட்டிகளும் அடங்கியிருந்ததாகவும், அவற்றைத் தமதெனத் தூதுகோஷ்டி ஒப்புக்கொள்ள மறுத்ததுடன் சுங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தவும் அனுமதிக்கவில்லையெனவும் கூறினுர்.

---

## ஆறு மாத காலத்தில் தி. மு. க. சாதித்தது என்ன?

### காமராஜர் கேட்கிறுர்

திருச்சி, செப். 20



தி. மு. க. அரசாங்கம், அதன் ஆறு மாத கால ஆட்சியில் உருப்படியாக என்ன செய்திருக்கிறது என்று காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு, காட்டூர் காங்கிரஸ் மாநாட்டுத் திடலில் நடந்த ஒரு பெரிய பொதுக்கூட்டத்தில் திரு. காமராஜ் பேசுகையில், தி. மு. க. அரசு, மொழிப் பிரச்னையைக் காங்கிரசுக்கு எதிரான ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறது என்று குற்றஞ்சாட்டினுர்.

**ஏன் பதற்றம்?**

காங்கிரஸ், தமிழ் மக்களின் கோரிக்கைகளை எடுத்து வைத்தால், அதைக்கண்டு தி. மு. க. பதற்றமடைவதன் காரணம் விளங்கவில்லை என்றுர், திரு. காமராஜ்.

தி. மு. க., ஆட்சிமொழிப் பிரச்னையையும் போதனு மொழிப் பிரச்னையையும் ஒன்ருகப் போட்டுக்குழப்புகிறது. இரண்டும் வெவ்வேறு பிரச்னைகள். மொழியின் பெயரால் மக்களின் உணர்ச்சியை மீண்டும் தூண்டிவிட தி. மு. க. முயல்கிறது என்று கூறி, இந்தி பேசாத மக்களுக்கு நேருஜி கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் விரைவில் ஒரு மசோதா கொண்டுவரப்படுமென்று திரு. காமராஜ் உறுதியளித்தார்.

விவசாயிகளுக்குத் தி. மு. க. அரசாங்கத்திடமிருந்து நியாயம் கிடைக்கவில்லை என்றும் திரு. காமராஜ் கூறினுர்.

**ஓடிவிட வேண்டாம்**

தி. மு. க. ஓடிவிட முயற்சிக்காமல், மீதியுள்ள நாலரை வருடங்களுக்காவது நன்ருக ஆளட்டும். அவர்கள் ஆட்சிப்பொறுப்பிலிருந்து ஓட முயற்சித்தால், அது மக்களுக்குத் துரோகம் செய்வதாகும் என்றுர் திரு. காமராஜ்

**நாஞ சொன்னேன்?**

திரு. காமராஜ் ரூபாய்க்கு 2 படி அரிசி போடுவதானுல் தான் ராஜினுமாச் செய்யத் தயார் என்று திரு. அண்ணுதுரை சமீபத்தில் கூறியதைக் குறிப்பிட்டு, "ரூபாய்க்கு 2 படி அரிசி போடுகிறேன் என்று நான் எப்போதாவது சொன்னேனு? அண்ணுதுரை தான் ரூபாய்க்கு 3 படி அரிசி தருவதாக வாக்களித்தார். ரூபாய்க்குப்படி அரிசி என்று கூடச்சென்னை நகரிலும், கோயம்புத்தூரிலும் மட்டும்தான் கொடுக்கிருர்கள். அதுகூட அரைகுறைதான்" என்றுர் திரு. காமராஜ்.

சில அதிகாரிகள் தி. மு.க. மந்திரிகளைத் திருப்தி செய்ய அளவுக்குமீறிப் போகிருர்கள் என்றும், அதிகாரிகள் இப்படி ஆளுங்கட்சியின் நிர்ப்பந்தத்துக்குப் பணிவது நல்ல தல்ல என்றும் திரு. காமராஜர் கூறினுர்.

---

## மன்னர் ஹுசெயினின் பாகிஸ்தான் விஜயம்

அம்மான், செப். 20

ஜோர்தான்மன்னர் ஹுசெயின் உத்தியோகபூர்வமான இரண்டு நாள் விஜயத்தில், நாளை பாகிஸ்தான் செல்கிறுர்.

இதற்கிடையில், மாஸ்கோவில் வெளியான அறிவிப்பொன்றில் ஒக்டோபர் 2-ந் திகதியன்று, ரஷ்ய விஜயமொன்றை மேற்கொண்டு மன்னர் ஹுசெயின் மாஸ்கோ வந்து சேர்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## 1371 பேர் கொண்ட திருச்சி சீரணி

### அண்ணு தொடக்கிவைத்தார்

திருச்சி, செப். 20

மாணவர்களும் மற்றவர்களுமடங்கிய 1,371பேரைக் கொண்ட சீரணியொன்றைத் தமிழக முதன்மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை நேற்று தொடக்கிவைத்தார். இச்சீரணியில் 7 வழக்கறிஞர்களும் உள்ளனர்.

புதிய திட்டங்களைச் சீரணி வகுத்துச் செயற்படுத்துமெனவும், தரிசு நிலங்களை சாகுபடிக்கு ஏற்றவகையில் திருத்தியமைக்கும் எனவும் தாம் நம்புவதாக முதன்மந்திரி தெரிவித்தார்.

சீரணியின் மரியாதை அணிவகுப்பை முதன்மந்திரி ஏற்றுக்கொண்ட பின் பேசுகையில் சீரணியில் பெருமளவு சேர்ந்துள்ள மாணவர்களின் ஊக்கத்தைப் பாராட்டினுர். தன்னலமற்ற சேவையுணர்ச்சியுடன் கடமையாற்றுமாறும் வேலைத் திட்டங்கள் பற்றிய ஆலோசனைகளை அவ்வப்போது மந்திரிகளிடம் பெற்று அவற்றுக்கேற்பத் திட்டமிட்டுச் செயல்புரியும்படியும் திரு. அண்ணுதுரை மாணவர்களைக் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய தமிழக உணவு மந்திரி திரு. மதியழகன், சீரணிக்ள் உணவு உற்பத்தியையும், நாட்டின் செல்வத்தையும் பெருக்க உதவுமெனக் கூறினுர்.

---

## இந்திய மந்திரி பக்ருதீன் யூகோ. பிரதமரை சந்தித்தார்

பெல்கிரேட், செப். 20

இந்திய கைத்தொழில் அபிவிருத்தி மந்திரி திரு. பக்ருதீன் அலி அஹமத், நேற்று பெல்கிரேடில் யூகோஸ்லாவியப் பிரதமர் திரு. ரூடி கோலாக்கை சந்தித்துப் பேசினுர்.

முன்னதாக, பத்திரிகையாளரிடம் அவர் பேசுகையில் இந்தியா, யூகோஸ்லாவியா, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய மூன்று நாடுகளுக்குமிடையேயான பொருளாதார ஒப்பந்தம் மூலம் அந்நாடுகளுக்கிடையே 1954ம் ஆண்டிலிருந்து பெருமளவில் பொருளாதார ஒத்துழைப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறினுர்.

மூன்று நாடுகளுக்குமிடையேயான வர்த்தகம் வருடா வருடம் வளர்ச்சியடைந்து வந்துள்ளதாகக் குறிப்பிட்ட திரு. அஹமத் கைத்தொழில் அபிவிருத்தியிலும் அவை இனி இணைந்து செயலாற்றுமென நம்பிக்கை தெரிவித்தார்.

கைத்தொழில் அபிவிருத்திக்கான இம்மூன்று நாடுகளினதும் ஒத்துழைப்பில் வியாபாரம் முக்கிய நோக்கமாக இருக்காது. பரஸ்பர உதவியே பிரதான அம்சமாக விளங்கவேண்டுமெனவும் திரு. அஹமத் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இளைஞர்கள் மத்தியில் பேரெழுச்சி வேண்டும்'

## கிளிநொச்சி எம். பி.

பூநகரி, புதன்

"நாடிருக்கும் நிலைமையில் நமது இளைஞர் அரசாங்க உத்தியோகத்தை நம்பியிருப்பதிற் பயனில்லை. எந்த நாடும் விரைவான முன்னேற்றத்தைக் காணவேண்டுமானால் இளைஞரிடையே பேரெழுச்சிவேண்டும். அவர்கள் சிறப்பான முறையிற் பணியாற்றினால் எந்தவொரு பகுதியும் பின்தங்கியுள்ளது என்ற அழுகுரலுக்கு இடமில்லை. அரசியல் கொள்கைகள் காரணமாக மாறுபட்டு, பிளவுபட்டு எந்த முன்னேற்றமான காரியங்களுக்கும் இளைஞர் சமுதாயம் தடைக்கல்லாக இருத்தல் ஆகாது.

இவ்வாறு கிளிநொச்சி எம். பி. கா. பொ. இரத்தினம் பூநகரி மாகாவித்தியாலயப் பெற்றோர் தினவிழாவிற்குப் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கல்லூரி அதிபரின் பணியைப் பாராட்டினார்.

மாற்றம் சமூகச் சூழலிலே ஏற்படும் போது கல்விக் கொள்கைகளிலே மாற்றம் ஏற்படுவது தடுக்கமுடியாது புதியன எதையும் எதிர்க்க வேண்டும் என்று எதிர்க்காது புதிய கல்வித்திட்டத்தை நடுநிலை நின்று ஆராய்ந்து பெற்றோர் தம் சிறுரின் எதிர்காலத்தைத் திட்டமான முறையில் வகுக்க வேண்டும். சனப்பெருக்கமும் வேலையில்லாப் பிரச்னையும் தலைதூக்கியுள்ள இக்காலத்தில் தொழிற்கல்வியை வலியுறுத்துவதல அரசாங்கம் முன்வந்துள்ளது போற்றற்குரியது என அதிபர் திரு. மு. சிவானந்தம் தமது அறிக்கையில் குறிப்பிட்டார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# "தமிழ் கலாச்சாரத்துக்கு புறம்பான நாடகங்கள் அழிவையே தேடும்"

குரும்பசிட்டி, புதன்

"ஆங்கிலக் கலாச்சாரத்தைக்கொண்டு, தமிழ்கலாச்சாரத்துக்குப் புறம்பான பாத்திர அமைப்பு. நடிப்பு முறைகளை பின்பற்றி ஆபாசம் நிறைந்தவகையில் தயாரிக்கப்படும் தமிழ் நாடகங்கள் நமது முன்னேற்றத்துக்கு தமிழ் அழிவையே தேடித்தரும்."

இவ்வாறு யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியரும் நாடக ஆசிரியருமான திரு. க. சொக்கலிங்கம் [சொக்கன்] குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற நாடக விழாவுக்குத் தலைமைதாங்கி உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார். இவ்விழா குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் மன்ற ஆதரவில் நடைபெற்றது.

திரு. சொக்கன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"எதிர்கால இளைஞர்களை நற் பிரஜைகளாகத் திகழக் கூடிய சிறந்த கருத்துக்களை எடுத்துக்காட்டி நாடகங்களைப் படைக்க எழுத்தாளர் முன்வரவேண்டும். கலைஞர்கள் கட்டுப்பாடு நிறைந்தவர்களாக இருத்தல்வேண்டும். தற்போது சிங்கள நாடகங்களில் புதிய உத்திகள் கையாளப்படுவதால் பல சிறந்த தரமான நாடகங்கள் மேடையிடப்படுகின்றன. தமிழ் நாடகத் தயாரிப்பாளர்களும் புதுமை நிறைந்த உத்திகளைக் கொண்டு தரம்வாய்ந்த நாடகங்களை உருவாக்க வேண்டும்."

# ஐக்கிய பண்டசாலையில் கட்டுப்பாட்டு விலை மீறப்பட்டதாம்

இமையாணன், புதன்

உடுப்பிட்டியிலுள்ள ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் ஐக்கிய பண்டகசாலையில் 'நெஸ்டோமோல்ட்' கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க 10 சதம் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டதாம்.

இதுசம்பந்தமாக ஐக்கிய பண்டகசாலை மனேஜர் மீது விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் வழக்குத் தொடர்துள்ளனர்.

தொண்டமனாற்றிலுள்ள கடையொன்றில் நெஸ்டோமோல்ட் கட்டுப்பாட்டுவிலையிலும் 40 சதம் கூடுதலாக விற்கப்பட்டதாகவும் கடைச்சொந்தக்காரர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு. டபிள்யு. எம். ஜெயசேகரா நடத்திய திடீர் பரிசோதனையின் போதே இவர்கள் பிடிபட்டதாக அறியப்படுகிறது.

## புதிய அதிபர்

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் புதிய அதிபராக வண. பிதா எவ். ஜே. ஸ்ரனிஸ்லஸ் நியமனம் பெற்றுள்ளார். இவர் இளவாலை புனித ஹென்றிஸ் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றியவர்.

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட வணபிதா. எம். ஜே. மரியாம்பிள்ளைக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும், பழைய மாணவர்களும் பிரியாவிடை விருந்தளித்துக் கௌரவித்தனர். ஆசிரியர் திரு. சபாரத்தினம், ஆசிரியர் திரு. [illegible] காமந்தம்பி [illegible] அதிபரின் சேவைவலம், குணநலம் பாராட்டிப் பேசினர்.

## இந்திய உபகாரச்சம்பளம் பெறும்மாணவன்

ஊர்காவற்றுறை, புதன்

மாதகலைச் சேர்ந்த ஜோர்ஜ் இ. சிமாம்பிள்ளை இந்திய அரசினரால் வழங்கப்பட்ட உபகாரச்சம்பளம் பெற்று பஞ்சாப்பில் உள்ள ஹோசியாப்பூர் அரசினர் மருத்துவக்கல்லூரியில் கல்வி கற்று டாக்டராக இந்தியா சென்றுள்ளார். இவர் தீவுப்பகுதி கல்வி அதிகாரி திரு. எம். ஜே. சிமாம்பிள்ளையின் சிரேஷ்டபுத்திரராவார்.

## தமிழ் காங்கிரஸ் யாழ்ப்பாணக்கிளை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், வியாழன்

"சுயநலம் கருதாது கட்சிக்கொள்கையில் பற்றுள்ள இளம்வாலிபர்களாலேதான் எந்தக்கட்சியும் வளரமுடியும். சுயநலம் கருதாது உண்மையில் உழைக்கும் வாலிபர்களைக்கொண்டு தமிழ்க்காங்கிரஸ்கட்சி பலப்படுத்தப்படுவதற்கு நாடெங்கும்உள்ள காங்கிரஸ் வாலிப முன்னணிகளுக்குப் புத்துயிரளிக்கவேண்டும்."

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்கட்சியின் யாழ்ப்பாணக்கிளை அங்குரார்ப்பணக்கூட்டத்தில் தலைமை வகித்துப்பேசிய திரு. தி. மகேந்திரராசா மேற்கண்டவாறு கூறினர்.

காங்கிரஸ்கட்சியின் காரியதரிசி திரு தா. சங்கரப்பிள்ளை கட்சி முன்னேற்றத்துக்குரிய பல புது வழிகளை எடுத்துரைத்தார். இக்கூட்டத்தில் திறமையான யாழ்ப்பாண வாலிப முன்னணியொன்றை உருவாக்குவதற்கு ஒரு தற்காலிக குழு தெரிவு செய்யப்பட்டது. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் பிறந்தநாள்விழாவை இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்தவேண்டுமெனவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது [வி. நி.]

## சைக்கிள் திருட்டு சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சைக்கிள் களவுகள் சம்பந்தமாக திருநெல்வேலியைச் சேர்ந்த மகேந்திரன் என்ற வாலிபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இம்மாதம் 14-ம் திகதி களவு போனதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்ட சைக்கிள் ஒன்றை இவ்வாலிபரிடமிருந்து பொலிஸார் மீட்டுள்ளனர். இன்னுமொரு களவு போன சைக்கிளும், பல சைக்கிள்களின் உதிரிப்பாகங்களும்கூட, கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். சந்தேக நபர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டார். [ந. நி]

## 'லைடன்' விளையாட்டுக்கழகம்

ஊர்காவற்றுறை, புதன்

லைடன் தீவென அழைக்கப்படும் வேலணைத் தீவில் 'லைடன் விளையாட்டுக் கழகம்,' என ஒரு கழகம் அண்மையில் நிறுவப்பட்டுள்ளது.

பின்வருபவர்கள் இதன் அமைப்புக்கூட்டத்தில் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. மாணிக்கம், உப தலைவர்கள் திரு எஸ். அந்தோனிப்பிள்ளை, திரு. வி. சிவசம்பு, திரு. வி. ஜே. செல்வம், இணைக் காரியதரிசிகள் திரு. கே. துளசிகாமணி, திரு பி. பொன்னுச்சாமி, தனாதிகாரி: திரு. வி. சிவபாலன்.

## கான்டனில் சண்டை

மாஸ்கோ, செப். 20

மாஸ்கோ ரேடியோ ஒலிபரப்பிய செய்தியொன்றின்படி சீனாவிலுள்ள கான்டன் நகரில், ஒரு சிரேஷ்ட இராணுவ உத்தியோகத்தர், இராணுவக்கிடங்கொன்றில் உள்ள ஆயுதங்களனைத்தையும் மா-சே-துங் எதிர்ப்பாளர்களிடம் ஒப்படைத்துவிட்டதாகக் கூறப்பட்டுள்ளது. கான்டனில் சண்டை நிற்கவில்லை என்றும் ரேடியோ கூறியது.

இதற்கிடையில் ஹொங்கொங் தப்பிச் செல்லும் அகதிகளைப் பயமுறுத்தித் தடுக்கும் நோக்கத்துடன் சீன இராணுவம் குவான்டுங் மாகாணத்தின் எல்லையில் இராணுவப் பயிற்சி நடத்தி வருவதாகஹொங்கொங்கிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பாலைக்குழி பெண் கடத்தல்

மன்னார், புதன்

கடந்த 8-ம் திகதி பாலைக்குழியில் நடந்த பெண் கடத்தல் வழக்குச் சம்பந்தமாகத் தலைமன்னாரில் வைத்துக் கைது செய்யப்பட்ட எண்மரைத்தலா 500 ரூபாபிணையில் செல்ல உதவி மாஜிஸ்திரேட் ஜனாப் யூசுப் அனுமதித்தார். சம்பந்தப்பட்ட நாகம்மா என்ற பெண்ணை தன் தாயுடன் செல்ல அனுமதித்தார்





லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர். மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய அதி பிரசித்த பால் தயாரிப்புத் தொழிற்சாலையிலிருந்து வருகிறது. ஹாலந்தின் அதிகபட்ச அபிமானம் மிகுந்த இதில் 28 சத விகிதம் பாற் கொழுப்பும் 26.7 சத விகிதம் புரதச் சத்தும் உண்டு.

லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், உண்மையான "முதற்றர" பூரண ஆடைப்பால் தர வேண்டிய அனைத்தையும் தருகிறது; இருந்தும், வேறெந்த ரகப் பவுடரையும் விடக் குறைவான நியாய விலையில் உங்களுக்குக் கிடைக்கிறது.

ஏக விநியோகஸ்தர்கள்

மில்லர்ஸ்

லிமிட்டெட்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர்கள் — வழக்கறிஞர் கிரிக்கெட் போட்டி

# ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்கள் பெற்றுர்

## மாவட்ட நீதிபதியின் அபார ஆட்டம்

### வெற்றி தோல்வியில்லை

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் வழக்கறிஞர்கள் கோஷ்டிக்கும் டாக்டர்கள் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற வருடாந்த கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது ஆட்டத்தில் வழக்கறிஞர் கோஷ்டியினர் 45 நிமிடங்களில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றனர். மாவட்ட நீதிபதி திரு. விஜயசேகரா [காப்டன்] ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களைப் பெற்றுர். இரண்டாவது ஆட்டத்தில் வழக்கறிஞர்கள் கோஷ்டியினர் ஒரு விக்கெட் நஷ்டத்துக்கு 51 ஓட்டங்களைப் பெற்றனர்.

டாக்டர்கள் கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் 141 நிமிடங்களில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 115 ஓட்டங்களைப் பெற்று போட்டியை நிறுத்திக்கொண்டது. இதில் டாக்டர் டபிள்யூ. நல்லையா மாத்திரம் ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இரண்டாவது இன்னிங்ஸில் இவர்கள் 5 விக்கெட் நஷ்டத்திற்கு 11 ஓட்டங்களைப் பெற்றதுடன் நேரம் போதாமையால் போட்டியை முடித்தனர்.

வழக்கறிஞர்கள் கோஷ்டி [முதலாவது ஆட்டம்] திரு. புவாட் 12, திரு. வேதசிங்கா 08, திரு. வின்சட் பாலசிங்கம் 01, திரு. விஜயசேகரா 51, திரு. இராசநாயகம் 05, திரு. சிவலிங்கம் 10, திரு. ஸ்ரீதரன் 01, திரு. ஜமீல் 11, திரு. சேனுதிராஜா 03, திரு. அம்பலவாணர் 02, திரு. இரத்தினசேகர் 01.

டாக்டர்கள் கோஷ்டி [முதலாம் ஆட்டம்] திரு. சிவகுருநாதன் 00, திரு. விவேகானந்தன் 12, திரு. துரைசிங்கம் 03, திரு. நல்லையா 59, திரு. முருகுப்பிள்ளை 02, திரு. ஆனந்தராஜா 05, திரு. திருநாவுக்கரசு 02, திரு. இராசையா 09, திரு. துரைசிங்கம் 00, திரு. பஞ்சலிங்கம் 04, திரு. விக்கினராசா 00. [ந.நி.]

உதைபந்தாட்டம்:

## ஸ்கந்தாவுக்கு அமோக வெற்றி

யாழ்ப்பாணம், வியா. சுன்னுகம் ஸ்கந்தவரோயாக் கல்லூரி உதைபந்தாட்ட முதல்பிரிவுக்கோஷ்டியும், இரண்டாம் பிரிவுக் கோஷ்டியும் கொக்குவில் இந்துக்கல்லூரி இரு பிரிவுக் கோஷ்டிகளுடனும் மோதிக் கொண்டன. ஸ்கந்தா முதல் பிரிவுக் கோஷ்டி கொக்குவில் இந்து முதல் பிரிவுக் கோஷ்டியுடன் மோதிக் கொண்ட போட்டியில் ஸ்கந்தா 8 கோல்களை அடித்து அமோக வெற்றியைப் பெற்றுக்கொண்டது. கொக்குவில் இந்து ஒரு கோலையும் போடவில்லை. ஸ்கந்தா 2-ம் பிரிவும், இந்து 2-ம் பிரிவும் மோதிக் கொண்டபோட்டியில் ஒவ்வொரு கோஷ்டியும் தலா 1-1 கோல்களைப் பெற்று போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

முதல் பிரிவுப் போட்டிக்கு திரு. சண்முகரத்தினமும், 2-ம் பிரிவுப் போட்டிக்கு திரு. ஏ. முருகையாவும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளையாட்டரங்கில் போட்டிகள் நடைபெற்றன.

## மகாஜனவுக்கு வெற்றி

குரும்பசிட்டி, செவ். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி இரண்டாம் பிரிவுக் கோஷ்டிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரி இரண்டாம் பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 3—2 கோல்களால் மகாஜனக் கல்லூரி இந்துக்கல்லூரியைத் தோற்கடித்தது. இந்தப் போட்டி மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இடைவேளையின்போது மகாஜனக் கோஷ்டி வீரர்கள் மூன்று கோல்களையும் போட்டுக்கொண்டனர். இந்துக்கல்லூரி ஒரு கோலையும் அடித்துக் கொள்ளவில்லை. மகாஜனக் கோஷ்டி சார்பில் நாகரத்தினம், ஜெகசோதி, குமாரசாமி ஆகிய வீரர்கள் தலா ஒவ்வொரு கோல்கள் அடித்துக் கொண்டனர். இப்போட்டிக்கு திரு. ரி. தனபாலசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

[6-ம் பக்கம் பார்க்க]


3-வது வெற்றி வாரம்!

கெபிடல் [கொட்டாஞ்சேனை] | பிளாஸா [வெள்ளவத்தை] | விஜயா [மட்டுநகர்]
விஜிதா [ஹட்டன்] | மொடர்ன் [பதுளை] | ஸ்ரீகிருஷ்ண [திருமலை]

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

புதுமையான கதை! உணர்ச்சிமிக்க வசனம்!
காதிற்கினிய பாடல்கள்!
முழுவதும் ஒரு ஹாஸ்ய விருந்து!

ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், நாகேஷ்,
விஜயலட்சுமி, ரத்னு, மாதவி
நடித்த



நாம் மூவர்

டைரக்ஷன்: ஜம்பு | பாடல்கள்: வாலி | இசை: என்.எம்.எஸ்.

கடைசி சிலதினங்கள் | கிங்ஸ்லி [கொழும்பு]

மற்றும் 5 திரைகளில்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த
அன்பே வா



ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
காந்தராவ் — வசந்தி
நடித்த
வீரபாண்டியன்

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி - பத்மினி
நடித்த
வஞ்சிக் கோட்டை வாலிபன்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி பி.ப. 6-30 9-45
போயா தினங்களில் 3 காட்சி
லாலாஜ்
LALACH
[ Hindi Thriller ]

REGAL JAFFNA
Time: 4-30 7-00 p. m.
9-45 p. m.
Jack Lemmon
Romy Schneider
in
Columbia's
Good Neighbor Sam
[ADULTS]


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 21-9-67

[செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 தமிழோடிசை பாடல், 6-30 பேச்சு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 தாளவாத்தியக்கச்சேரி, 7-45 நாடகம் — 'சபதம்' — திருமதி பி. நடராசா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி — என். சண்முகரத்தினம்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன். மாதகல், சஞ்சூசையப்பர் கல்லூரி பெற்றேர் ஆசிரிய சங்கத்தின் 9-வது வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் அடங்கிய நிர்வாகசபை தெரியப்பட்டுள்ளது. தலைவர்: திரு. இ. நவரட்ணசிங்கம், உபதலைவர்கள்: சுவாமிதேவதாசன், திருவாளர்கள்: எஸ். ஜேம்ஸ் எஸ். கந்தையா, எஸ். பீற்றர். இணைக்காரியதரிசிகள்: திருவாளர் எல். ஏ. யோப்சஎஸ். சி. நடராசா, தனாதிகாரி: திரு. எஸ். பி. யோசப். நிர்வாகசபை அங்கத்தவர்கள்: வி. நவரத்னராசா எஸ். ஞானப்பிரகாசம், க. அ அம்பலவாணர் எஸ். பிரான்சிஸ், ஏ. மத்தையாஸ், அ. அம்பலவாணர், எஸ் அகஸ்ரின் எஸ். சந்திரசேகரா, வி. இராமசாமி. [நி]

ஃ ஃ ஃ

பொல்காவலை, புதன். பொல்காவலை முஸ்லிம் நிர்வாக சங்கத்தின் 11 வது ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்- ஜனுப் வை. எல். எம். கலீம், தலைவர் - ஜனுப். கே. எஸ். சாஹுல் ஹமீட், உபதலைவர் ஜனுப் டி. எம். தாகா, ஜனுப் எஸ். எம். மௌலானு, பொதுச் செயலாளர்- ஜனுப் டி. பி. கிச்சில், உதவிச்செயலாளர் ஜனுப் டி. கே. முஹாறிதீன் ஜனுப் ஏ. எஸ். எம். சபுர்தீன், தனாதிகாரி- ஜனுப் எம். எச். ஏ. சத்தார், உப தனாதிகாரி- என். ஜி. சனூஸ், பரிசோதகர்- ஏ. எஸ். எம். சமீன்.

இக்கூட்டத்தில் மத்திய கிழக்கு அகதிகளுக்கு ஓர் உதவி நிதி வசூல் செய்து தலைமை இயக்கத்தின் மூலம் அனுப்பி வைப்பது முதலிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.


## வரி விளம்பரம்

### தேவை

அச்சுக்கோர்ப்பவர்கள்

ஐந்துவருட அனுபவத்துடனுள்ள அச்சுக்கோர்பவர்கள் தேவை. தகுதிக்கேற்றபடி சம்பளம் வழங்கப்படும் தெரிவுக்கு முன்னர் நேர்முகபரீட்சைக்கு தோற்ற வேண்டும். விபரங்களுக்கு விளம்பர இல. 2369 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2369

மெசின்மயின்டர்ஸ்

மூன்றுவருட அனுபவத்துடனுள்ள மெசின்மயின்டர்ஸ் தேவை. தகுதிக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும். விபரங்களுக்கு விளம்பர இல: 2370 மே/பா ஈழநாடு. யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்குஎழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2370

கசியர்:

யாழ்ப்பாணம் பஜாரில் உள்ள ஓர் ஆங்கில மருந்துச்சாலைக்கு பிணைப்பணம் செலுத்தக்கூடிய கஷியர் தேவை. நற்சான்று பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். இருபாலாருடைய விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும். விளம்பர இல. 2375, மே./பா. ஈழநாடு யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 2375

தகரங்கள்

பாவித்த கல்வனைஸ் தகரங்கள் 200 தேவை. நீளம், விலை விபரங்களுடன் தெரிவிக்கவும். நா. செல்வரட்ணம், கோண்டாவில்கிழக்கு, கோண்டாவில். 2376

### விற்பனைக்கு

புத்தகங்கள்:

ஐந்தாம் வகுப்புக்கு மூன்றும் தவணைக் காலத்தில் உபயோகிக்கத்தக்க மாதிரி வினப்பத்திரங்கள் விற்பனையாகின்றன. பரீட்சையில் வருவன போன்றவை. பாடத்திட்டத்தை அடக்கியவை. கணிதம், சூழல், பாஷை, ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்குத் தனித்தனிப் புத்தகங்கள், எழுதியவர்: புதுமைலோலன். ஒவ்வொன்றும் சதம் 70. தொகையாக வாங்குவோருக்குக் கழிவுண்டு. வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2374


## சிரமதானம்

பண்டத்தரிப்பு, புதன். இளவாலை மாரீசன்கூடல் கிராம அபிவிருத்திச் சபையின் கீழ் சிரமதானம்மூலம் வீதி அமைக்கும் வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது. இந்தச்சிரமதான வேலையை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா ஆரம்பித்து வைத்தார்.


## நிருபர்கள் தேவை

கீழ்வரும் இடங்களில் உடனுக்குடன் செய்திகளை அனுப்பக்கூடிய நிருபர்கள் தேவை. கல்வித் தராதரம் பத்திரிகைத் தொழில் அனுபவம் முதலிய விபரங்களுடன்விண்ணப்பங்களை ஆசிரியர், 'ஈழநாடு', யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு இம்மாதம் 30-ந் திகதிக்குள் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும்.

நிருபர்கள் வேண்டிய இடங்கள்:

மாணிப்பாய், மன்னர், வவுனியா, நாவலப்பிட்டி, பளை, காரைநகர், திருகோணமலை, கண்டி, புங்குடுதீவு, மாத்தளை, கிளிநொச்சி. 257


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒத்துழைப்பை பலப்படுத்த இந்திரா - டட்லி இணக்கம்

## சீனு, மேற்காசியா, வியட்னும் பற்றியும் ஆலோசனை

கொழும்பு, செவ்வாய்

இலங்கை—இந்தியா ஆகிய இருநாடுகளுக்குமிடையில் ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்திக்கொள்ளபாரதப் பிரதமர் திருமதிஇந்திரா காந்தியும்-இலங்கைப்பிரதம மந்திரி திரு. டட்லிசேனநாயகாவும் இன்று நடத்திய பேச்சுவார்த்தையின்போதுஇணங்கியுள்ளனர்.

இலங்கை - இந்தியப் பிரதமர்களுக்கிடையிலான முதல் சுற்றுப்பேச்சு வார்த்தைகள் இன்று செனட்சபைக் கட்டிடத்திலுள்ள பிரதமரின் காரியாலயத்தில் நடைபெற்றது. இரண்டரை மணி நேரம் நீடித்த இப்பேச்சு வார்த்தைகளில் தேயிலை வர்த்தகம், கூட்டுக் கைத்தொழில் முயற்சி, உலக விவகாரங்கள் ஆகியவைகளுடன் இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்குட்படாத ஒன்றரை லட்சம் இந்திய வம்சா வழியினரின் எதிர்காலம் பற்றியும் ஆலோசனை செய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

இருபிரதமர்களும் இருநாடுகளுக்குமிடையில் பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்திக்கொள்ள இணங்கியுள்ள அதேசமயம் சீனு, மேற்காசியநிலைமை, வியட்னும் விவகாரம் ஆகியவை பற்றியும்கருத்துப் பரிமாறிக் கொண்டதாக அறியப்படுகிறது. பாகிஸ்தானுடனுன இந்தியாவின் தொடர்புகள் தாஷ்கண்ட் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்று பாரதப் பிரதமர் தெரிவித்ததாகவும் தெரிகின்றது.

இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் பற்றி இருநாடுகளின் அதிகாரிகளும் கூடிப் பேசவேண்டுமென்றும்அவர்கள் அபிப்பிராயப்பட்டதாக அறியப்படுகின்றது.

இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று காலை 9 மணிக்குச் சில நிமிடங்கள் முன்னதாக இலங்கைப் பிரதமரின் காரியாலயத்துக்கு வந்துசேர்ந்தபோது பிரதமர் டட்லி சேனநாயகா திருமதி இந்திரா கந்தியை எதிர்கொண்டு அழைத்துச் சென்ருர்.

இப்பேச்சுவார்த்தைகளின் போது இலங்கைப் பிரதமருக்கு உதவியாக வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி பி. பீரிஸ், இந்தியாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்திய பிரதமரிடம் இந்திய வம்சாவழியினர் பிரச்சினை சம்பந்தமாக ஏற்கனவே இலங்கைதூதுக்கோஷ்டிகளால்சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகளேயும் பேச்சுவார்த்தைகளின் போதுதிருமதி காந்தி பரிசீலனைக்கு சமர்ப்பித்ததாகத் தெரிகின்றது.

உலக மார்க்கட்டில் தேயிலையின் விலைகள் வீழ்ச்சியுருலும் ஸ்திரமாக இருக்கவும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்பற்றியும் இரு பிரதமர்களும் கலந்தாலோசித்ததாகத் தெரிகின்றது.

இருபிரதமர்களும் அடுத்த வியாழக்கிழமையன்று மீண்டும் சந்தித்துப் பேசுவார்கள்.

## "இந்தியாவுக்கு வழி காட்டியது இலங்கை"

### பெண்கள்மத்தியில்இந்திரா

கொழும்பு, செவ். "ஒரு பெண்மணியை பிரதம மந்திரியாகத் தெரிவு செய்து இலங்கை இந்தியாவுக்கும் உலக நாடுகளுக்கும் வழிகாட்டியது" என்று பாரதப்பிரதம திருமதி இந்திராகாந்தி இன்று இலங்கை பெண்கள் சங்கத்தின் ஆதரவில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேறபின்போது கூறிஞர். இந்தியாவில் இன்னும் பலபாகங்களிலும் பெண்கள் பழைய நிலையிலேயே இருக்கின்ருர்கள். சீதாதேவியின் காலத்தில் போல இன்றும் அடக்கமாகவும் அமைதியாகவும் பல பெண்கள் வாழ்கிருர்கள் என்று தெரிவித்த திருமதி இந்திராகாந்திபடித்தபெண்கள் முன்னேறுவர்கள் என்று தாம்கூறவில்லையென்ருர்

உலகில் சரிபாதிபேர் பெண்கள்தான். எனவே அவர்கள் ஆண்களுக்கு எந்த வகையிலும் குறைந்தவர்கள்அல்ல. உலகின் பல பாகங்களிலும் முற்காலத்தில் பெண்கள் பெரும் பொறுப்பான பதவிகளில் இருந்துவந்துள்ளார்கள். போர்வீரர்களாகவும், மகாராணிகளாகவும் இருந்துள்ளார்கள். அவர்களால்ஆண்கள் செய்யும் காரியங்களை செய்யமுடியாது என்று கொள்ளமுடியாது. சுதந்திரப் போராட்டத்தின்போது இந்தியாவில் ஆண்களோடு சரிசமமாக பெண்கள் போராடினுர்கள். அப்போதெல்லாம் ஆண் பெண் என்று எவரும் வித்தியாசம் பாராட்டவில்லை என்றுஅவர் மேலும் கூறிஞர். இந்தியாவிலுள்ள டாட்டா ஆராய்ச்சிநிலையத்தின் தலைவர் ஒரு பெண் என்றும் அங்கு அரைவாசிப்பேர் பெண்களாகவே இருக்கிருர்களென்றும் அவர் கூறிஞர்.

பெண்கள் ஆண்களோடு சமமாக முன்னேறவேண்டும். அதற்காக அவர்கள் போராடவேண்டும் என்று திருமதி காந்தி கூறிஞர்.

## "ஒரே சமூகமாகவாழ வழி செய்யுங்கள்"

### பாரதப்பிரதமரிடம் தொண்டமான் கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஸ்தாபனங்களைச் சேர்ந்த தூதுகோஷ்டிகள் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை இன்று சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தின.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் தலைமையில் திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்த கோஷ்டியினர், இந்தியப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இந்தியா திரும்புகிறவர்கள் குறிப்பிட்ட சிறிது காலத்துக்காவது ஒரேசமூகமாக வாழ அனுமதிக்கவேண்டுமென்றும், இந்திய மக்களுடன் ஐக்கியமாகும் வரை அவர்கள் ஒரே சமூகமாக்வாழ ஏற்பாடுசெய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர், இந்தியா திரும்பும் தோட்டத்தொழிலாளர்கள் பொதுவாகவே விவசாயத் துறையில் ஈடுபட்டவர்களானதால் அவர்களைப் பாதிப்பது பாதகமாக ... தூதுகோஷ்டியினர் பாரதப் பிரதமரிடம் எடுத்துக் கூறினர்கள்.

## 'சகிப்புத்தன்மைதான் அமைதிக்கு அடிப்படை'

### கொழும்பு மாநகரசபை வரவேற்பில் பாரதப்பிரதமர்

கொழும்பு, செவ்வாய்

உலகில் அமைதி நிலவுவதற்கு அரசியல், சமூக துறைகளில் மக்கள் மத்தியில்சகிப்புத்தன்மை நிலவவேண்டும் என்று பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி கொழும்பு மாநகரசபை தமக்களித்த வரவேற்பின்போதுகூறிஞர்.

மாநகரசபை வரவேற்பு வைபவத்திற்குமேயர் ஜனுப் ஜாபிர் ஏகாதர் தலைமை வகித்து பாரதப்பிரதமரை வரவேற்றுப்பேசிஞர்.

திருமதி இந்திராகாந்தி வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப்பேசிஞர்.

மக்கள் தங்களுக்குள் பொதுவாக இருந்துவரும் ஒருமைப்பாடுகளை வளர்க்க வேண்டும். அதன்மூலம் பரஸ்பரம் உதவிக்கொள்வதோடு, பரஸ்பரம் புரிந்து கொள்வதும்அவசியமென்று அவர் கூறிஞர்.

இருநாடுகளுக்குமிடையில் அமைதியான உறவுகள் இருந்து வருவது மகிழ்ச்சிக்குரிய அறிகுறி. நாடுகளுக்குடையில் சகலதுறைகளிலும்ஒத்துழைப்பு இருப்பது அவசியம் என்று பாரதப்பிரதமர் கூறிஞர்.

இந்தியா சுதந்திரம்கிடைத்தபோது விவசாயம் மோசமடைந்துபோய் இருந்தது. தொழில்துறைகளும் கேவல நிலையில் இருந்தன.

சுதந்திரத்தின்பின்னர் இந்தத் துறைகளில் முன்னேற்றம் காண்பதற்காக கடுமையாக உழைக்கவேண்டியிருக்கின்றது அதேபோல்இலங்கையும உழைத்துவருவதாக நான் நம்புகிறேன் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

மூதூர்க்கடிதம்

## 'பொலிஸ்நிலையஅதிகாரியை இடமாற்ற வேண்டாம்'

நமது நிருபர்

மூதூரில் தற்போது பொலிஸ் நிலைய அதிகாரியாகக் கடமையாற்றும் திரு. சி. பாலகிருஷ்ணனை இடமாற்றம் செய்யவேண்டாமென இங்குள்ள பல கிராமசபைகளும் கிராமமுன்னேற்றச் சங்கங்களும் பொதுநல இயக்கங்களும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலைக் கோரியுள்ளன.

திரு. பாலகிருஷ்ணன் இங்கு இடம்மாறிவந்து மூன்று மாதங்கள் தானும் ஆகவில்லையெனவும் இக்குறுகிய காலத்தில் பல சட்டவிரோதச்செயல்களை அவர் தடுத்துள்ளாரெனவும் பொலிசார் பொதுமக்கள் உறவைப் பலப்படுத்த அவர் நல்லபணியாற்றியுள்ளாரெனவும் இவை காரணமாக இடமாற்றம் செய்வதைப் பிற்போடும்படியும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### பாரதி விழா

இம்மாதம 26-ம் திகதி மூதூரில் பாரதி விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராஜதுரை, கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம், கவிஞர் காசி. ஆனந்தன் ஆகியோர் விழாவில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளார்கள்.

### பாடசாலைகளில் திடீர் பரிசோதனை

மூதூர் பகுதியிலுள்ள பாடசாலைகளில் இப்போது திடீர் பரிசோதனைகள் நடைபெற்றுவருவதாக அறியப்படுகிறது. பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் ஒழுங்காக நேரத்துக்கு வருவதில்லையெனத் தெரிவிக்கப்பட்ட புகாரைத் தொடர்ந்தே பரிசோதகர்கள் இப்பகுதிப் பாடசாலைகளுக்குத் திடீரென விஜயம் செய்து பரிசோதனை நடத்துவதாகத் தெரிகிறது.

### கடும் வறட்சி

மூதூர்ப்பகுதியில் இப்போது கடும்வறட்சி நிலவிவருகிறது. ஆறுகள், குளங்கள் மற்றும் சிறு சிறு நீர்த்தேக்கங்கள் எல்லாமே இப்போது வறண்டு காணப்படுகின்றன. இதன்காரணமாக மக்கள் குடிநீர்கிடைக்காது கஷ்டப்படுகிருர்கள்.

கடும்சூட்டினுல் இங்கு குழந்தைகளுக்கு ஒருவித வயிற்றோட்ட நோய் பரவி வருகிறது.

பருவ மழையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் விவசாயிகள் இங்கு நிலவும் கடும் வறட்சியால் கவலை கொண்டுள்ளனர்.

### 6 வருடங்களாகக் கூட்டமில்லையாம்

மூதூர் இந்து வாலிபர் சங்கம் கடந்த 6 வருட காலமாகக் கூட்டமெதுவும் நடத்தவில்லையெனத் தெரிகிறது. இது விஜயம் தற்போது மூதூர் பகுதி காரியாதிகாரியின கவனத்துக்குக்கொண்டு வரப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

### யாழ். மாநகரசபை....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

17 வட்டாரங்களிலும் போட்டியிடுவதென தமிழ்க் காங்கிரஸ் ஏற்கெனவே அறிவித்துள்ளது. தமிழ்க் காங்கிரஸின் அடுத்த கமிட்டிக் கூட்டத்தில் இவ்விஷயம் பிரஸ்தாபிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

### மகாஜனுவுக்கு . . .

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

இரு கல்லூரிகளினதும் மூன்ரும் பிரிவுக் கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற ஆட்டத்தில் மகாஜனுக் கல்லூரிக் கோஷ்டி 2 —0 கோல்களினுல் வெற்றியீட்டியது. திரு. தேவபாலசிங்கம் இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றிஞர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி ... இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org